**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI,**
**(CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)**

**C.C. No: 25/2017**

**Dated:25.11.2025**
**Deposition of Witnesses for PW -3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.பெரியசாமி | வயது | : | |
| தகப்பனார் பெயர் | : | | தாலுகா | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed by Tmt.Deepika,Translator of this court in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023

**1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜரில்லை மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.3ம் எதிரி PT Warrant மூலம் ஆஜர்படுத்தப்பட்டார். இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**As per the circular of the Hon'ble High Court,Madras in ROC.NO.74663/2024/F1-dt.21.02.2025 the identity of the witness verified with their identity card. Aathar card of the Witness verified.**

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:–**

நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம் Q பிரிவு குற்றப்புலணாய்வு பிரிவில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது பணி ஓய்வு பெற்று இராமநாதபுரத்தில் குடியிருந்து வருகிறேன். கடந்த 25.04.2013ம் தேதி இராமநாதபுரம் மாவட்டம் Q பிரிவில் தலைமைகாவலராக பணிபுரிந்து வந்த போது அன்று காலை ஆய்வாளர் திரு கென்னடி , SI சந்தணமாரி, SI கணேசமூர்த்தி , SSI கோவிந்தன், ஆகியோர்கள் இராமேஸ்வரம் முகூந்தராயர் சத்திரம் கடற்கரை பகுதியில் அந்நியர் நடமாட்டம் குறித்து ரோந்து பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது சுமார் காலை 5.30 மணியளவில் ஆய்வாளர் திரு கென்னடி அவர்களுக்கு கிடைத்த இரகசிய தகவலின் படி பாறையடி தெற்கு கடற்கரை பகுதியில் தடைசெய்யப்பட்ட

போதை பொருள் கஞ்சா கறுப்பு நிற பேக்குகளுடன் 3 பேர் இருப்பதாக ஆய்வாளருக்கு வந்த தகவலின் படி ஆய்வாளருடன் புறப்படும் முன்பு ஆய்வாளர் இராமமேஸ்வரம் VAOஜெயகாந்தன், கிராம உதவியாளர் முனியசாமி ஆகியோரை சம்பவ இடத்திற்கு வரவழைத்து போலீஸ்பார்டிகளாகிய ஆய்வாளர் திரு கென்னடி , SI சந்தணமாரி, SI கணேசமூர்த்தி , SSI கோவிந்தன், ஆகியோருடன் நானும் புறப்பட்டு இராமேஸ்வரம் பாறையடி தெற்கு கடற்கரை பகுதிக்கு சென்றோம்.அங்கு நின்று கொண்டிருந்த 3 பேர் எங்களை கண்டதும் ஓட எத்தனித்தார்கள் . அவர்களில் ஒருவர் பிடிபட்டுக்கொண்டார் மற்ற இருவர் தப்பிச்சென்றுவிட்டார்கள். அந்த பிடிபட்ட நபர் நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ள ஜான்சன் ஆவார். அவரிடம் ஆய்வாளர் தப்பிச்சொன்ற நபர்கள் பற்றி விசாரித்த போது ஓடிய நபர் பெயர் 1. செல்வக்குமார் இராமேஸ்வரம் 2. டென்சிங் என்ற டென்னி என்று கூறினார். மேலும் இலங்கைக்கு கடத்துவதற்காக 6 கருப்பு நிற ரெசின் சிப் உள்ள கஞ்சா பேக்குகள் தயார் நிலையில் வைத்திருப்பதாகவும் மேலும் இலங்கையில் இருந்து படகு வந்தவுடன் ஏற்றிவிடுவதற்காக இருந்ததாக ஆய்வாளர் விசாரணையின் போது ஜான்சன் கூறினார். பிறகு ஆய்வளார் இராமமேஸ்வரம் VAOஜெயகாந்தன், கிராம உதவியாளர் முனியசாமி ஆகியோர் முன்னிலையில் காலை 8.00 மணிக்கு அத்தாட்சி தயார் செய்து அந்த 6 கருப்பு நிற ரெசின் சிப் உள்ள கஞ்சா பேக்குகளை அத்தாட்சியில் கைப்பற்றினார். அதில் சாட்சிகளாக இராமமேஸ்வரம் VAOஜெயகாந்தன், கிராம உதவியாளர் முனியசாமி கையொப்பம் செய்தார்கள். மேலும் ஆய்வாளரிடம் ஜான்சன் அந்த 6 கஞ்சா பேக்குகளை ஏற்றிவிட கூலியாக பணம் ரூ10,000/- தப்பிச்சென்ற செல்வக்குமார் ஜான்சனுக்கு தருவதாக ஆய்வாளர் விசாரணையில் கூறினார்.(இதனை எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் பதிவு செய்ய ஆட்சேபித்தார் ஆட்சேபணை குறித்து பரிசீலிக்கப்பட்டது. மேற்சொன்ன விபரங்கள் ஒப்புதல் வாக்குமூல விபரங்களாக ஒன்றும் சொல்லப்படவில்லை என்பதால் ஆட்சேபனை ஏற்கப்படவில்லை) தப்பிச்சென்றவர்களை தேடி பார்த்துவிட்டு கண்டுபிடிக்க முடியாததால் தடய சொத்துக்கள் மற்றும் எதிரியுடன் தனுஸ்கோடி காவல் நிலையம் வந்து எதிரி மற்றும் தடய சொத்துக்களை ஆய்வாளர் தனி அறிக்கை தயார் செய்து ஒப்படைத்தார். குற்ற எண் 21/2013 சட்டப்பிரிவுகள் 8(c) r/w 20(b)(ii)(C) and 25 NDPS Act- ன் படி சார்பு ஆய்வாளர் வழக்கு பதிவு செய்து வழக்கை மேல் விசாரணைக்காக கோவில் காவல் நிலைய வட்ட ஆய்வாளர் அவர்களுக்கு அனுப்பி வைத்தார்கள். கோவில் காவல் நிலைய வட்ட ஆய்வாளர் கண்ணன் அவர்கள் மேற்கண்ட சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சி தயார்

செய்து கைப்பற்றப்பட்ட 6 கருப்பு நிற ரெசின் சிப் உள்ள கஞ்சா பேக்குகள் ஒவ்வொன்றிலிருந்தும் தலா 25 கி.கி எடை இருந்தது. 6 கஞ்சா பேக்குகளின் மொத்த எடை 150 கிலோ எடை இருந்தது. மேற்படி சாட்சிகள் முன்னிலையில் ஆய்வாளர் ஒவ்வொரு கஞ்சா பேக்குகளில் இருந்தும் தலா 50 கிராம் வீதம் 6 கஞ்சா மூட்டைகளில் இருந்தும் 12 மாதிரிகள் எடுத்தார்கள். மாதிரி எடுத்தது போக ஒவ்வொரு பேக்குகளின் எடை 24.900 கி.கி . ஆய்வாளர் எதிரி ஜான்சனிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலம் வாங்கினார். அதில் சாட்சிகளாக இராமமேஸ்வரம் VAOஜெயகாந்தன், கிராம உதவியாளர் முனியசாமி கையொப்பம் செய்தார்கள்.பிறகு கோவில் வட்ட ஆய்வாளர் என்னை விசாரித்தார் விபரம் சொன்னேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை

திறந்த நீதிமனறத்தில் சாட்சி மற்றம் அவரது வழக்குநர்
முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு
சொல்லப்பட்டு அவரால் கனினியில் வடிவாக்கப்பட்டு
சாட்சியிடம் படித்துக் கட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு
சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது .

அத்தியாவசிய பண்டங்கள் மற்றும் போதைப் பொருள் தடுப்பு சிறப்பு நீதிமன்றம்,
புதுக்கோட்டை.